# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.24] CHENNAI WEDNESDAY, JUNE 19,2013**

**Aani 5, Vijaya, Thiruvalluvar Aandu-2044**


## Part VI --- Section 2

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**
**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./பு.கொ.க.(RPO)/19/3, 21–01–2013 நாளிட்டது)**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h), 66, 86(1) (e) ஆகிய பிரிவுகளின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறைஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம்செய்யும் ஒழுங்குமுறைவிதியை இதன்மூலம் செய்கிறது, அதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 181 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

2 ஆம் ஒழுங்குமுறைவிதியில், (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், (h) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(h) ஒருங்கிணைந்த மின்கொள்முதல் கட்டணம்” என்பது, நீண்டகால மின்சாரம் வழங்குநர்கள் அனைவரிடமிருந்தும் முந்திய ஆண்டில் சுயமின்உற்பத்திச் செலவு உள்ளடங்கலாக, ஆனால், நீர்ம எரிபொருள், வணிகர்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதல், குறுகிய கால கொள்முதல்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல் அடிப்படை நீங்கலாக, மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் மின்உற்பத்தியாளர்களின் அந்த வகை/துணை–வகைக்கு ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் முன்னுரிமை மின்கட்டணத்தின் அதிகபட்சம் 75 விழுக்காட்டிற்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரரால் மின்கொள்முதல் செய்துள்ள நிரல் சராசரி ஒருங்கிணைந்த விலை என்று பொருள்படும்”.

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**
**2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய**
**(புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு)**
**ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய திருத்தம்**

**விளக்கவுரை**

நீண்ட கால அடிப்படையில் ஒருங்கிணைந்த மின்கொள்முதல் கட்டணம், மரபு சார்ந்த எரிபொருள் விலையின் ஏற்ற இறக்கத்தின் பொருட்டு, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமை மின்கட்டணத்தைவிட அதிகரிக்கலாம். நியாயமான ஒருகிணைந்த மின்கொள்முதல் கட்டணத்தை பெறுவதற்காக வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது என்பது விவேகமுடையதாகும். எனவே, மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதியை திருத்தம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**இருந்துவரும் வகைமுறையையும் திருத்தம் செய்யப்பட்ட வகைமுறையையும் காட்டும் விவர அறிக்கை**

| வ. எண் | இருந்து வரும் வகைமுறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 1 | “(h)ஒருங்கிணைந்த மின்கொள்முதல் கட்டணம் என்பது, நீண்டகால மின்சாரம் வழங்குநர்கள் அனைவரிடமிருந்தும் முந்திய ஆண்டில் சுயமின்உற்பத்திச் செலவு உள்ளடங்கலாக, ஆனால், நீர்ம எரிபொருள், வணிகர்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதல், குறுகிய கால கொள்முதல்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல் அடிப்படை நீங்கலாக”. | “(h) ஒருங்கிணைந்த மின்கொள்முதல் கட்டணம் என்பது, நீண்டகால மின்சாரம் வழங்குநர்கள் அனைவரிடமிருந்தும் முந்திய ஆண்டில் சுயமின்உற்பத்திச் செலவு உள்ளடங்கலாக, ஆனால், நீர்ம எரிபொருள், வணிகர்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதல், குறுகிய கால கொள்முதல்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல் அடிப்படை நீங்கலாக, மரபுசார எரிசக்தி ஆதாரங்கள் மின்உற்பத்தியாளர்களின் அந்தவகை/ துணைவகைக்கு ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் முன்னுரிமை மின்கட்டணத்தின் அதிகபட்சம் 75 விழுக்காட்டிற்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரரால் மின்கொள்முதல் செய்துள்ள நிரல் சராசரி ஒருங்கிணைந்த விலை என்று பொருள்படும்”. |

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்